DEPOSITON OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
**Assistant Sessions Judge, Sankari**
**IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI**

| | |
|---|---|
| Calender | } |
| Miscellaneous | } |
| Preliminary Register | } |
| Sessions | } Case No.SC**.178/2022** |
| Deposition of Witness | { PW**.8** |
| | { Prosecution |
| | { |
| Name | : டாக்டர். பிரதீப் |
| Father's Name | : |
| Taluk | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 04.08.2025.

2025ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 04ம் நாள் அரசு தரப்பு சாட்சி என்பவரின் சாட்சியாகிய அ.சா.8ன் வாக்குமூலம் 1969ம் ஆண்டு 44 வது சட்டத்தின் 4 வது பிரிவின் கீழ் திரு.ந.பன்னீர்செல்வம்,பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிடப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு சாட்சி விசாரிக்கப்படுகிறார்.

எதிரிகள் ஆஜரில் உள்ளார்கள்.

முதல் விசாரணை

நான் தற்போது ஆத்தூர் தலைமை அரசு மருத்துவமனையில் உதவி குடிமையியல் மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். நான் இதற்கு முன்பு 06.07.2020 அன்று சங்ககிரி அரசு மருத்துவமனையில் இதே நிலையில் பணிபுரிந்து வந்தபோது அன்று காலை 11.30

மணிக்கு சங்ககிரி மேஸ்திரி காட்டைச் சேர்ந்த தினேஷ் என்பவர் அவரது தந்தை சுமார் 58 வயது மதிக்கத்தக்க ரத்தினவேல் என்பவரை சிகிச்சைக்காக அழைத்து வந்தார். நான் அவருக்கு ஏற்பட்ட காயங்கள் பற்றி விசாரித்தபோது, தனக்கு தெரிந்த 3 நபர்கள் கூர்மையான ஆயுதங்களால் தாக்கி காயம் ஏற்படுத்தியதாக தெரிவித்தார். நான் அவரை பரிசோதித்தபோது அவருக்கு கீழ்கண்ட காயங்கள் இருந்தன. 1) இடது தோல் பட்டையில் 2x2x2 அளவுள்ள சிதைந்த காயம், 2) இடதுபக்க வயிற்றில் 2x1x1 அளவுள்ள சிதைந்த காயம், 3) இடது மார்பகத்தில் 0.5x0.5x0.5 அளவுள்ள சிதைந்த காயம், 4) இடது கை முட்டியில் பழைய சிராய்ப்பு காயம் ஒன்று. நான் மேற்படி காயங்களுக்கு முதலுதவி சிகிச்சை வழங்கி மேல்சிகிச்சைக்காக சேலம் அரசு குமாரமங்கலம் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். நான் தயார் செய்த விபத்து பதிவேட்டு அறிக்கை அ.சா.ஆ.9. இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

குறுக்கு விசாரணை

காயமடைந்த ரத்தினவேல் என்பவரை நான் பார்த்தபோது அவர் அணிந்திருந்த சட்டையில் ரத்தக் கரை இருந்தது என்றாலும், அதை நான் சொல்லி கழட்டி வைத்துவிட்டுதான் பரிசோதனை செய்தேன் என்றால், சரிதான். அந்த ரத்தக் கரை படிந்த சட்டையை போலீசார் என்னிடமிருந்து கைப்பற்றவில்லை என்றால், சரிதான். இந்த சிகிச்சை சம்பந்தமாக காவல் துறைக்கு தகவல் சொன்ன நேரத்தை என்னால் குறிப்பிட்டு சொல்ல முடியாது. அதனால் நான் இது சம்பந்தமாக காவல் துறைக்கு தகவல் தெரிவிக்கவில்லை என்றால், சரியல்ல. போலீசார் என்னை விசாரிக்கும்போது ஆயுதங்கள் எதையும் என்னிடம் காட்டவில்லை. மேலே குறிப்பிட்ட காயங்கள் சொரசொரப்பான பகுதியில் கீழே விழுந்து இழுத்து செல்லப்பட்டால் ஏற்பட வாய்ப்பு உண்டு என்றால், சரிதான்.

ஒப்பம்/- டாக்டர். பிரதீப்

ஒப்பம்/- திரு.ந.பன்னீர்செல்வம்,
சார்பு நீதிபதி, சங்ககிரி.